**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். CC 209 /2022**
**வழக்கு சாட்சி. அ.சா.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | கார்த்திகேயன் | **வயது** | : | 50 /2026 |
| **தந்தை பெயர்** | : | முத்து | **தாலுகா** | : | |
| **கிராமம்** | : | அறந்தாங்கி | **தொழில்** | : | டஸ்மார்க் மேற்பார்வையாளர் |

**Solemnly affirmed by Tmt.Sahanathirushya, Grade-III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873.**

**Accused present. Counsel Present.**

**As per Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identiy of the witness verified with their identity card.**
**Aathar card of the Witness verified.**

<u>தேதி : 05.03.2026</u>

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வந்து டாஸ்மார்க்கில் மேற்பார்வையாளராக பணயாற்றி வருகிறேன். கடந்த 10.07.2021 ஆம் தேதியன்று மதியம் 01.00 மணியளவில் நான் மதுபானக்கடையில் பணியில் இருந்த போது அங்கு சில நபர்கள் மது போதையில் தகராறு செய்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்குள் ஏற்ப்பட்ட தகராரில் என் மேல் விழுந்ததில் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது. சம்பவ இடத்தில் தகராறு செய்த நபர்கள் யார் என்று எனக்கு தெரியாது. நான் சிகிச்சைக்காக அறந்தாங்கி அரசு மருத்துவமனைக்கு சென்ற போது போலிஸ்சார் என்னிடம் ஒரு எழுதப்படாத வெள்ளைத்தாளில் என்னிடம் கையொப்பம் பெற்றனர். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ1.** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிஸ்சார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியானவர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்தால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam 2023 சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது.**

ஆஜர் எதிரியை தெரியுமா என்றால், தெரியாது. கடந்த 10.07.2021 ஆம் தேதியன்று ஆஜர் எதிரி என்னை தகாத வார்த்தைகளால் பேசி பீர் பாட்டில்–ஆல் தாக்கி காயம் ஏற்படுத்தி, கொலைமிரட்டல் விடுத்ததாக புகார் வாக்குமூலத்தில் போலிஸ்விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதாரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

இல்லை.

**மறுவிசாரணை:**
இல்லை

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

**ஒம்/−எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**

**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். CC 209/2022**
**வழக்கு சாட்சி. அ.சா.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | எஸ்.பாண்டியன் | **வயது** | : | 49/2026 |
| **தந்தை பெயர்** | : | செல்லமுத்து | **தாலுகா** | : | |
| **கிராமம்** | : | | **தொழில்** | : | சிறப்பு உதவி ஆய்வாளர், அறந்தாங்கி காவல் நிலையம் |

**Solemnly affirmed by Tmt.Sahanathirushya, Grade-III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873.**

**Accused present. Both side Counsel Present.**

**As per Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identiy of the witness verified with their identity card.**
**Aathar card of the Witness verified.**

<u>தேதி : 05.03.2026</u>

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:**

1. நான் தற்போது அறந்தாங்கி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன் என்பவரது கையொப்பம் எனன்கு நன்கு தெரியும். இவ்வழக்கின் அ.சா.1 பிறழ் சாட்சியாக மாறிவிட்ட காரணத்தினால் இவ்வழக்கின் தன்மை கருதி ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 10.07.2021 அன்று 14.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் இராஜேந்திரன் என்பவர் அறந்தாங்கி காவல் நிலையத்தில் நிலைய அலுவலில் இருந்தபோது அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கார்த்திகேயன் த/பெ.முத்து என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண்.827/2021, இ.த.ச. பிரிவுகள் 294(பி), 323, 353, 506(2) இன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன் என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளார். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.–2** ஆகவும், முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.–3** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

3. உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன் வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 10.07.2021 அன்று 16.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கருப்பையா மற்றும் கணபதி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு **மாதிரி வரைபடம், பார்வை மகஜர்** ஆகியன தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.–4** ஆகவும், **பார்வை மகஜர் அ.சா.ஆ.–5** ஆகவும் குறியீடு

செய்யப்படுகிறது. பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையுள்ள சாட்சிகளை விசாரணை செய்து அவர்களது வாக்குமூலங்களை தனித்தனியே பதிவு செய்துள்ளார். அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.மதியரசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்றுள்ளார். அ.சா.1 இன் **விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரியை 10.07.2021 அன்று காரணம் கூறி கைது செய்து தக்க நிலைய பிணையில் விடுவித்துள்ளார். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் இராஜேந்திரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கின் புலன் விசாரணை முடித்து அதே பிரிவுகளின் கீழ் 22.11.2021 அன்று குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

புகார்தாரர் சந்தேகத்தின் பேரில் கொடுத்த புகாரினை முறையாக விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கையும், குற்ற இறுதியறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் மற்றும் மாதிரி வரைபடம், பார்வை மகஜர் ஆகியன சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யவில்லை, அவைகள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. இவ்வழக்கின் எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால், சரியல்ல.

2) நான் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றால், சரியல்ல. அ.சா.1 கொடுத்த தவறான புகாரின் அடிப்படையில் சரியாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால், சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் கையிருப்பு சாட்சிகளை வைத்து காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால், சரியல்ல. எதிரிக்கம் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால், சரியல்ல. நான் சொன்னன தேதியில் எதிரி கைது செய்யப்படவில்லை என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை**:

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

**ஓம்/–எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**